## மே – 17 – வியாழன்

### புனித பஸ்கால் பபிலோன்

**"துணிவோடிரும்: எருசலேமில் என்னைப் பற்றிச் சான்று பகர்ந்ததுபோல உரோமையிலும் நீர் சான்று பகரவேண்டும்."**

### முதல் வாசகம் : திபணி 22 : 30, 23 : 6 – 11

அந்நாட்களில் யூதர்கள் பவுல்மீது என்ன குற்றம் சுமத்துகிறார்கள் என்பதை உறுதியாக அறிய ஆயிரத்தவர் தலைவர் விரும்பினார். எனவே, மறுநாள் தலைமைக் குருக்களும், தலைமைச் சங்கத்தினர் அனைவரும் கூடிவருமாறு அவர் ஆணை பிறப்பித்துப் பவுலை சிறையிலிருந்து கொண்டுவந்து அவர்கள் முன் நிறுத்தினார். அவர்களுள் ஒருபகுதியினர் சதுசேயர் என்றும், மறுபகுதியினர் பரிசேயர் என்றும் பவுல் அறிந்து, "சகோதரரே! நான் ஒருபரிசேயன். பரிசேய மரபில் பிறந்தவன் இறந்தோர் உயிர்த்தெழுவர் என்னும் எதிர்நோக்கின் பொருட்டு விசாரிக்கப்படுகிறேன்" என்று தலைமைச் சங்கத்தின் முன் உரத்தகுரலில் கூறினார்.அவர் இப்படிச்சொன்னபோது பரிசேயருக்கும் சதுசேயருக்குமிடையே வாக்குவாதம் எழுந்தது. எனவே அங்கு திரண்டிருந்தோர் இரண்டாகப்பிரிந்தனர்.சதுசேயப் பிரிவினர் வானதூதரும் உயிர்த்தெழுதல், ஆவிகள் ஆகியனவும் இல்லை என்று கூறிவந்தனர் பரிசேயர் இவையனைத்தும் உண்டென ஏற்றுக் கொண்டனர்.அங்கு பெருங்கூச்சல் எழுந்தது. பரிசேயப் பிரிவினைச்சேர்ந்த மறைநூல் அறிஞருள் சிலர் எழுந்து, "இவரிடம் தவறொன்றையும் காணோமே! வானதூதர் ஒருவரோ, ஓர் ஆவியோ இவரோடு பேசியிருக்கலாம் அல்லவா!" எனவாதாடினர்.வாக்குவாதம் முற்றவே அவர்கள் பவுலைப் பிய்த்தெறிந்து விடுவர் என ஆயிரத்தவர் தலைவர் அஞ்சி படைவீரரை வரச்சொல்லி அவரை அவர்கள் நடுவிலிருந்து பிடித்துக் கோட்டைக்குள் கூட்டிக்கொண்டு செல்லுமாறு ஆணை பிறப்பித்தார்.மறுநாள் இரவு ஆண்டவர் அவரருகில் நின்று, "துணிவோடிரும் எருசலேமில் என்னைப்பற்றி சான்று பகர்ந்ததுபோல உரோமையிலும் நீர் சான்றுபகர வேண்டும்" என்றார்.

**பதில்பாடல் :** உலகிலுள்ள அரசர்களே கடவுளைப் புகழ்த்தேத்துங்கள்.

### நற்செய்தி : யோவான் 17 : 20 - 26

அக்காலத்தில் இயேசு வானத்தைப் பார்த்து வேண்டியது : அவர்களுக்காக மட்டும் நான் வேண்டவில்லை அவர்களுடைய வார்த்தையின் வழியாக என்னிடம் நம்பிக்கை கொள்வோருக்காகவும் வேண்டுகிறேன்.எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக! இதனால் நீரே என்னை அனுப்பினீர் என்று உலகம் நம்பும்.நாம் ஒன்றாய் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருக்குமாறு நீர் எனக்கு அருளிய மாட்சியை நான் அவர்களுக்கு அளித்தேன்.இவ்வாறு, நான் அவர்களுள்ளும் நீர் என்னுள்ளும் இருப்பதால் அவர்களும் முழுமையாய் ஒன்றித்திருப்பார்களாக. இதனால் நீரே என்னை அனுப்பினீர் எனவும் நீர் என்மீது அன்பு கொண்டுள்ளதுபோல் அவர்கள்மீதும் அன்பு கொண்டுள்ளீர் எனவும் உலகு அறிந்து கொள்ளும்."தந்தையே, உலகம் தோன்றுமுன்னே நீர் என்மீது அன்புகொண்டு எனக்கு மாட்சி அளித்தீர். நீர் என்னிடம் ஒப்படைத்தவர்கள் என் மாட்சியைக் காணுமாறு அவர்களும் நான் இருக்கும் இடத்திலேயே என்னோடு இருக்க வேண்டும் என விரும்புகிறேன்.நீதியுள்ள தந்தையே, உலகு உம்மை அறியவில்லை ஆனால் நான் உம்மை அறிந்துள்ளேன். நீரே என்னை அனுப்பினீர் என அவர்களும் அறிந்து கொண்டார்கள்.நான் அவர்களோடு இணைந்திருக்கவும் நீர் என்மீது கொண்டிருந்த அன்பு அவர்கள்மீது இருக்கவும் உம்மைப்பற்றி அவர்களுக்கு அறிவித்தேன் இன்னும் அறிவிப்பேன்" என்றார்.

**தியானம்:** தந்தையாம் கடவுள் தம்மிடம் ஒப்படைத்த பணியை இறைமகன் இயேசு செவ்வனே செய்து வந்தார். தமது தந்தையார்? என்பதையும், அவர் விருப்பம் என்ன என்பதையும் தமது போதனைகள், புதுமைகள் வாயிலாகதம் சீடர்களுக்கும், தம்மைப் பின்பற்றிய அனைவருக்கும் அவர் கற்பித்துவந்தார். தமது பணிவாழ்வின் இறுதிக் கட்டத்தில் நின்று கொண்டு தாம் கைது செய்யப் படுவதற்கு முன்னர், தமது சீடர்களிடம் ஒப்படைத்த பணியை அவர்களும் செவ்வனே தொடரவேண்டும் என்பதற்காக, அவர்களுக்காகவும், அவர்களது போதனையை ஏற்றுக்கொள்ளும் மக்களுக்காகவும் தம் தந்தையிடம் மனமுருகி வேண்டுவதை இன்றைய நற்செய்தியில் வாசிக்கின்றோம். கடவுளின் அன்பின் ஆழத்தை அவர் மகன் இயேசுவின் போதனைகள், புதுமைகள் வாயிலாக மட்டுமல்ல அவரது பாடுகள், மரணம் வாயிலாக நன்கு அறிந்து கொண்ட திருத்தூதர்கள் தமது வாழ்கை, மரணம் என்பவற்றினூடாக அதே அன்பை உலகறியச் செய்தனர். உயிர்த்த இயேசுவை எதிர் கொண்ட சவுல், பவுலாக மனம்மாறி துணிவோடு சாட்சியம் பகருகின்றார். இறைமகன் இயேசு வழியாகக் கடவளின் அன்பை அறிந்து கொண்ட நாமும் ,அந்த அன்பை நம் அன்றாட வாழ்வில் சுவைத்து வாழ்ந்திடவும், இன்னும் அவரை அறியாத மக்களிடையே நாம் அவரது சாட்சிகளாக வாழ்ந்திடவும் தேவையான மனவுறுதியை மன்றாடிப் பெற்றுக்கொள்வோமாக! குறிப்பாக நம்மை வழிநடாத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்களுக்காவும் நாம் தொடர்ந்து இறைவனிடம் வேண்டுவோமாக!